பெரியாழ்வார் அருளிச் செய்த
பெரியாழ்வார் திருமொழி
நான்காம் பத்து

நான்காம் திருமொழி - நாவகாரியம்
முக்கரணங்களாலும் திருக்கோட்டியூரை அனுபவிப்பவரைக் கொண்டாடியும், அவ்வாறு அனுபவியாத அவைஷ்ணவரை இழித்தும் கூறுதல்

** நாவகாரியம் சொல்லிலாதவர் * நாள்தொறும் விருந்தோம்புவார் *
தேவகாரியம் செய்து * வேதம் பயின்று வாழ் திருக்கோட்டியூர் **
மூவர் காரியமும் திருத்தும் * முதல்வனைச் சிந்தியாத * அப்
பாவகாரிகளைப் படைத்தவன் * எங்ஙனம் படைத்தான் கொலோ! 1

குற்றமின்றிக் குணம் பெருக்கிக் * குருக்களுக்கு அனுகூலராய் *
செற்றம் ஒன்றும் இலாத * வண்கையினார்கள் வாழ் திருக்கோட்டியூர் **
துற்றி ஏழுலகுண்ட * தூமணிவண்ணன் தன்னைத் தொழாதவர் *
பெற்ற தாயர் வயிற்றினைப் * பெரு நோய் செய்வான் பிறந்தார்களே 2

வண்ண நன்மணியும் * மரதகமும் அழுத்தி * நிழல் எழும்
திண்ணை சூழ் திருக்கோட்டியூர்த் * திருமால் அவன் திருநாமங்கள் **
எண்ணக் கண்ட விரல்களால் * இறைப் பொழுதும் எண்ணகிலாது போய் *
உண்ணக் கண்ட தம் ஊத்தை வாய்க்குக் * கவளம் உந்துகின்றார்களே 3

உரக மெல்லணையான் கையில் * உறை சங்கம் போல் மடவன்னங்கள் *
நிரை கணம் பரந்தேறும் * செங்கமல வயல் திருக்கோட்டியூர் **
நரக நாசனை நாவில் கொண்டழையாத * மானிட சாதியர் *
பருகு நீரும் உடுக்கும் கூறையும் * பாவம் செய்தன தான் கொலோ! 4

ஆமையின் முதுகத்திடைக் குதி கொண்டு * தூமலர் சாடிப் போய் *
தீமை செய்து இளவாளைகள் * விளையாடு நீர்த் திருக்கோட்டியூர் **
நேமி சேர் தடங்கையினானை * நினைப்பிலா வலி நெஞ்சுடை *
பூமி பாரங்கள் உண்ணும் சோற்றினை வாங்கிப் * புல்லைத் திணிமினே 5

பூதம் ஐந்தொடு வேள்வி ஐந்து * புலன்கள் ஐந்து பொறிகளால் *
ஏதம் ஒன்றும் இலாத * வண்கையினார்கள் வாழ் திருக்கோட்டியூர் **
நாதனை நரசிங்கனை * நவின்றேத்துவார்கள் உழக்கிய *
பாத தூளி படுதலால் * இவ்வுலகம் பாக்கியம் செய்ததே 6

குருந்தம் ஒன்றொசித்தானொடும் சென்று * கூடி ஆடி விழாச் செய்து *
திருந்து நான்மறையோர் இராப்பகல் * ஏத்தி வாழ் திருக்கோட்டியூர் **
கருந்தட முகில்வண்ணனைக் * கடைக்கொண்டு கை தொழும் பத்தர்கள் *
இருந்த ஊரில் இருக்கும் மானிடர் * எத்தவங்கள் செய்தார் கொலோ! 7

நளிர்ந்த சீலன் நயாசலன் * அபிமானதுங்கனை நாள்தொறும் *
தெளிந்த செல்வனைச் சேவகம் கொண்ட * செங்கண்மால் திருக்கோட்டியூர் **
குளிர்ந்துறைகின்ற கோவிந்தன் * குணம் பாடுவார் உள்ள நாட்டினுள் *
விளைந்த தானியமும் இராக்கதர் * மீது கொள்ளகிலார்களே 8

கொம்பினார் பொழில் வாய் * குயில் இனம் கோவிந்தன் குணம் பாடு சீர் *
செம்பொனார் மதிள் சூழ் * செழுங்கழனியுடைத் திருக்கோட்டியூர் **
நம்பனை நரசிங்கனை * நவின்று ஏத்துவார்களைக் கண்டக்கால் *
எம்பிரான் தன சின்னங்கள் * இவரிவர் என்று ஆசைகள் தீர்வனே 9

காசின் வாய்க் கரம் விற்கிலும் * கரவாது மாற்றிலி சோறிட்டு *
தேச வார்த்தை படைக்கும் * வண்கையினார்கள் வாழ் திருக்கோட்டியூர் **
கேசவா! புருடோத்தமா! * கிளர் சோதியாய்! குறளா! என்று *
பேசுவார் அடியார்கள் * எந்தம்மை விற்கவும் பெறுவார்களே 10

** சீதநீர் புடை சூழ் * செழுங்கழனியுடைத் திருக்கோட்டியூர் *
ஆதியான் அடியாரையும் * அடிமை இன்றித் திரிவாரையும் **
கோதில் பட்டர்பிரான் * குளிர் புதுவைமன் விட்டுணுசித்தன் சொல் *
ஏதம் இன்றி உரைப்பவர் * இருடீகேசனுக்கு ஆளரே 11

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்